

மாண்புமிகு தமிழக முதல்வர்

**அம்மா அவர்கள்**

கோயம்புத்தூர் மாநகராட்சி

Newsletter Feb -2016



முனைவர்.ப.பராஜ்குமார், எம்,ஏ.,எல்.பி., பிஎச்.டி.,
மாண்புமிகு மேயர்

## முகவுரை

அஞ்சிடாத மனத்துணிவால், ஆண்டவனின் அருட்துணையால், வஞ்சகத்தை தகர்தெறிந்து வாய்மைதனைக் காத்து நிற்கும் நெஞ்சுரத்தின் நேர்முகம், ஈகையே இயல்பாய், வாகையே இலக்காய், தகைசால் அரசை வழிநடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2016-2017ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை மாநகரின் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் தயார் செய்து இம்மாமன்றத்தில் மிகுந்த மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன்.

“அரசின் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் மக்கள் நலன் கருதியே அமைய வேண்டும்” என்பதில் உறுதி கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவாகள், கோயம்புத்தூர் மாநகர மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு ‘திறன்மிகு நகரம்’ திட்டத்திற்காகவும் மற்றும் ‘அம்ருத்’ திட்டத்திற்காகவும் தமிழ்நாடு அரசின் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு முதற்கண் எனது பணிவான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழநாடு முதலமைச்சர் அவர்களால் இம்மாநகராட்சிக்கென சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களும் கடந்த 2015-16ம் ஆண்டின் மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களும் பெரும்பான்மையான அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளில் அனைத்துத் தரப்பு மக்களும் தன்னிறைவு பெறுவது ஒரு சிறந்த பொருளாதாரக் கோட்பாடாகும்.

எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கருத்திற்கிணங்க சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள், நீர் மேலாண்மைத் திட்டம், திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதார வசதிகள், தெருவிளக்குகள் மேம்பாடு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, கல்வித் துறையில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய வசதிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கான பல்வேறு கட்டமைப்பு வசதிகள் போன்றவை இந்நிதிநிலை அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ளது.

“நீர்வளம் பெருகினால் நிலவளம் பெரும், நிலவளம் பெருகினால் உலகம் செழிக்கும்”

எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய சிந்தனைக்கிணங்க, பல்வேறு நீர் ஆதாரங்களிலிருந்து இம்மாநகர மக்களுக்குக் கிடைக்கப் பெறும் குடிநீரைச் சீராக விநியோகம் செய்யும் வகையில் நீர் மேலாண்மைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

“பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு உள்கட்டமைப்புகளில் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது”

எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கருத்திற்கிணங்க மாநகராட்சியின் அனைத்து மண்டலப் பகுதிகளிலும் புதிய தார்சாலைகள் அமைத்தல், பழுதடைந்த சாலைகளைச் சீரமைத்தல் மற்றும் புதிய கான்கீரிட் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூ.101.50 கோடியும், புதிய மழைநீர் வடிகால்கள் கட்டுவதற்காக ரூ.30.00 கோடியும் இதுதவிர இணைப்புப் பாலங்கள், பாலம் விரிவுபடுத்துதல் போன்ற பணிகளுக்காக ரூ.10.00 கோடியும் இந்நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

“இயற்கை நமக்குப் பல சக்திகளை வாரி வழங்கி இருந்தாலும், அவற்றில் மிகப் பெரிய அளவில் மக்களுக்குப் பயன்படுவதாகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகவும் விளங்குவது மின் சக்தி என்று சொன்னால் அது மிகையாகாது”.

எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் வாக்கிற்கிணங்க மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் மின்சிக்கனத்தின் அவசியம் கருதி எல்இடி விளக்குகள் பொருத்துவதற்கு இந்நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முயற்சியின் மதிப்பை வெளிப்படுத்துவதோடு வெற்றியையும், தோல்வியையும் எதிர் கொள்வது எப்படி என்பதையும் விளையாட்டுத் திறன் போட்டிகள் கற்றுத் தருகின்றன.

எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய சிந்தனையின்படி விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிக்கவும் விளையாட்டு வீரர்களுக்கான பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையிலும் ஹாக்கி மைதானத்திற்கான பார்வையாளர் மாடம், விளையாட்டு வீரர்கள் தங்கும் விடுதி போன்ற விளையாட்டுக்கான கட்டமைப்பு வசதிகள் இந்நிதிநிலை அறிக்கையில் திட்டமிடப்பட்டுள்ளது.

வெள்ளலூர் உரக்கிடங்கினை மேம்படுத்தும் விதமாக பல்லுயிர் பூங்கா, உயிரியல் உரமாக்கல் நிலையம், உரக்கிடங்கினைச் சுற்றிலும் உள்ள பகுதிகளில் மரங்கள் நடுதல் போன்ற பணிகள் இந்நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளது.

“வாழ்க்கையில் முன்னேற நினைப்பவர்களுக்குத் தன்னம்பிக்கை மிகவும் முக்கியம். இந்தத் தன்னம்பிக்கையை மாணவ/ மாணவியருக்கு இளம் பருவத்திலேயே ஏற்படுத்தினால் அவர்களால் சாதிக்க முடியாதது ஏதுமில்லை”

எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் வாக்கிற்கிணங்க மாநகராட்சிப் பள்ளி மாணவ/ மாணவியர்களின் தன்னம்பிக்கையினை வளர்க்கும் விதமாக மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் மின்னணு நூலகம் அமைத்தல் போன்ற வசதிகள் இந்நிதியாண்டில் ஏற்படுத்தப்படும்.

“ஒலவ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்கச் செல்லாதது இல்”

இயலுமா என்பதை அறிந்து, செய்யும் வகையறிந்து உறுதியுடன் முயல்பவர்களுக்குச் செய்ய முடியாதது என்று எதுவும் இல்லை.

எனும் திருவள்ளுவரின் வாக்கின்படி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், செயல்படுத்தக் கூடிய திட்டங்கள் மட்டுமே இந்நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

“மிக அதிகமானவர்களுக்கு மிக அதிக நன்மையைப் பயப்பது தான் உ ண்மையான மக்களாட்சி”

எனும் மாண்புமிகு தமிழநாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கருத்திற்கிணங்க மாநகர மக்கள் அனைவருக்கும் திட்டங்களின் நன்மைகள் சென்று சேரும் வகையில் இந்நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு மட்டும் ரூ.77.04 கோடி அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் அனைத்துத் திட்டங்களையும் இம்மாநகர மக்களுக்குப் பயனுள்ள வகையில் நிறைவேற்றும் பொருட்டும், திட்டங்களுக்கான மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் நிதி ஒதுக்கீடுகள் இம்மாநகராட்சிக்கு உடனுக்குடன் கிடைக்கப் பெறவும், எனக்கு மிகவும் உறுதணையாக உள்ள மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுக்கும், கோயம்புத்தூர் மற்றம் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சிங்காநல்லூர், கோவை தெற்கு, கோவை வடக்கு கவுண்டம்பாளையம் மற்றும் கிணத்துகடவு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ப.ராஜ்குமார்.**
**மாண்புமிகு மேயர்**



**டாக்டர்.க. விஜய கார்த்திகேயன், இ.ஆ.ப.,**
**ஆணையாளர்**

## முகவுரை

தமிழக மக்களின் நலன்காக்கும் பல்வேறுத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தி வரும் தமிழ்நாடு அரசின் சீரிய வழிக்காட்டுதலின் பேரில் பல்வேறு நலன் பயக்கும் மக்கள் வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி இம்மாநகரத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் இம்மாநகராட்சியின் 2016-17ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையினைப் பெருமையுடன் முன்மொழிகிறேன்.

மத்திய அரசின் “திறன்மிகு நகரம” திட்டத்தில் நம் நாட்டின் எல்லா பெரு நகரங்களும் பங்கு பெற்று பல்வேறு கடுமையான போட்டிகளுக்கு இடையே முதல் 20 இடங்களில் கோயம்புத்தூர் மாநகரம் இடம் பெற்றிருப்பது நமது மாநகருக்குப் பெருமையளித்த ஓா் அற்புத தருணமாகும், இத்திட்டத்தில் மாநகரின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் குளங்களை சீரமைத்தல், உற்து சக்தியில்லாப் போக்குவரத்து வாகனங்கள் செல்ல பாதை உருவாக்குதல், மேம்படுத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை, அனைவருக்கும் சமூகமேம்பாடு மற்றும் வீட்டு வசதி போன்ற பல்வேறுத் திட்டங்கள் திறன் மிகு நகரம் திட்டத்தின் கீழ் இந்நிதியாண்டில் செயல்படுத்தப்படும் .

24x7 குடிநீர் விநியோகம் பழைய மாநகராட்சிப் பகுதிகளில் மட்டும் பயன்பாட்டில் உள்ளதால் “அம்ருட” திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகத்தினை இம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டப் பகுதிகளில் செயல்படுத்த தனிக்கவனம் செலுத்தப்படும். “அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்கான திட்டத்தின் கீழ் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டப் பகுதிகளில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள் அமைத்தல், பழுதடைந்த பழைய குடிநீர் விநியோகக் குழாய்களை மாற்றி புதிய குடிநீர் விநியோகக் குழாய்களை அமைத்தல், புதிய குடிநீர் இணைப்புகள் வீடுகளுக்கு வழங்குதல் மற்றும் பூங்காக்கள் மேம்பாடு போன்ற பல்வேறு திட்டங்கள் ரூ.395.41 கோடியில் செயல்படுத்தப்படும்.

மேலும் நகர்ப்புர சுகாதாரத் திட்டத்தின் கீழ் புதிய மருத்துவமனை கட்டுதல் மற்றும் மருத்துவமனைகளை இணைத்தல், நகர்நல மையங்களை மேம்படுத்துல் போன்றவை செயல்படுத்தப்படும்.

கடந்த ஓராண்டாக “தூய்மை இந்தியா” திட்டத்தின் கீழ் சுகாதார தரத்தில் பட்டியலிடப்பட்ட நகரங்களில், முதல் 20 தூய்மை நகரங்கள் பட்டியலில் நம் மாநகரம் இடம்பெற்று இருப்பது நம் மாநகருக்கு மற்றுமொரு பெருமையாகும். ஏற்கனவே செயல்பாட்டில் இருந்து வருகின்ற திட்டங்களை மேம்படுத்தும் வகையில் தனிநபர் கழிவறைகள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் சமூக கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்கள் கட்டப்பட்டு இந்நிதியாண்டில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இம்மாநகரில் வசிக்கும் பொது மக்களிடையே கழிவுகளைச் சேகரித்தல் மற்றும் தரம் பிரித்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மிகப்பெரிய மறுசுழற்சி பாடம் (Largest Recycling Lesson) என்ற தலைப்பின்கீழ் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் (Guinness Book of World Records) இடம்பெறும் வகையில் ஒரு சாதனை நிகழ்வு நடத்தப்பட்டது. இம்மாநகர மக்களின் ஒட்டு மொத்த ஆதரவுடன் கோயம்புத்தூர் மாநகராட்சி வெற்றிகரமாக இந்நிகழ்வை நடத்தி கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் தனக்கென ஓர் இடத்தை பிடித்துள்ளது.

வாகனங்கள் இல்லா ஞாயிற்றுக் கிழமை திட்டம் செயல்படுத்தியதன் காரணமாக பொது மக்களுடைய நேர்மறையான ஆதரவைப் பெருமளவில் இம்மாநகர் பெற்றுள்ளது. மாசு மற்றும் நெரிசலில் இருந்து விடுதலை பெற்றது மட்டுமில்லாமல் நகர்ப்புர மேம்பாடு அமைச்சகத்தின் வாயிலாக சிறந்த உந்து சக்தியில்லா வாகன விருது நம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குப் பெற்றுத் தந்துள்ளது. உந்து சக்தியில்லா வாகனப் போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் பல்வேறு மாதிரி சாலைகள் உறுதி செய்யப்பட்டு வருகின்ற ஆண்டில் செயல்படுத்தப்படும்.

மேலும் பல்லுயிர் பூங்கா அமைத்தல், உயிரியல் உரமாக்கல் நிலையம் அமைத்தல் மண்புழு மூலம் உரம் தயாரிக்கும் நிலையத்தினை விரிவுபடுத்துதல், பையோ-மைனிங் முறையில் திடக்கழிவுகளைக் கையாளுதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் வெள்ளலூர் உரக்கிடங்கில் செயல்படுத்த இந்நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியர்களின் அறிவுத்திறனையும் மற்றம் கல்விச் செயல்பாட்டையும் மேம்படுத்தும் பொருட்டு மேல்நிலைப்பள்ளிகளில் மின்னணு நூலகங்கள் அமைத்தல், மின்னணு வகுப்பறைகள் அமைத்தல் மற்றும் டேப்லெட் வகுப்பறைகள் அமைத்தல் போன்ற பணிகளும் இந்நிதிநிலை அறிக்கையில்

அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பசுமைப் பள்ளிகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தவும் இந்நிதிநிலை அறிக்கையில் செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பெரும்பான்மையான திட்டங்கள் செயல் வடிவம் பெற்றதன் மூலம் மாநகரின் அனைத்து தரப்பு மக்களும் இத்திட்டப் பயன்களை அடைந்துள்ளனர். மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சி தடையற்ற சேவை வழங்கி வருவதிலும், வரும் ஆண்டுகளில் இச்சேவைகளை வழங்குவதிலும் சிறப்புக் கவனமும், உயர்தர உட்கட்டமைப்பு வசதிகள், வெளிப்படையான நிர்வாகம், மக்கள் சார்ந்த திட்டங்கள் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கான நிலையான திட்டங்கள் செயல்படுத்துவதன் வாயிலாக கோயம்புத்தூர் மாநகரம் மாநில மற்றும் தேசிய அளவில் முதன்மை மாநகரமாக மாறும் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

டாக்டர்.க.விஜய கார்த்திகேயன், இ.ஆ.ப.,
ஆணையாளர்.

## கோயம்புத்தூர் மாநகராட்சி

### மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்





# சிங்காநல்லூர் குளத்தில் நகர்புற இயற்கை வள விளக்க மற்றும் கல்வி மையம் தொடங்குதல்



டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை



நகர மேம்பாட்டு பணிகள் துவங்குதல் ( LED விளக்கு அமைத்தல், தார் சாலை மற்றும் உடற்பயிற்சி கூடத்துடன் கூடிய பூங்கா அமைத்தல்)







# மருத்துவ முகாம் மற்றும் போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்துதல்





பில்லூர் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்த ஆலோசனை கூட்டம்



தூய்மை இந்தியா திட்டம் -திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சுற்றுசூழல் பாதிப்பு இல்லாமல்  கழிவுகள் செய்தல் பயிற்சி பட்டறை துவங்குதல்



பயன்பாட்டு குறிக்கோளுடன் கூடிய வரவு-செலவு திட்டம் 2016-2017 நிதி நிலை அறிக்கை சமர்ப்பித்தல்

